# மாபெரும் விசுவாசம்

## GREAT FAITH

Jerry Bates



தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற


**கிருபையுள்ள வார்த்தை**

தபால் பெட்டி – 15, அரசரடி, மதுரை – 625 016.

போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com


## யாருடைய விசுவாசம் மாபெரும் விசுவாசம் ?

உங்களுக்குத் தெரிந்தவர்களில் யாருடைய விசுவாசம் உறுதியானது, மற்றும் பெரியது? இக்கேள்விக்கு உடனடியாக, அது ஊழியக்காரர், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களுடைய விசுவாசம் என்று தீர்மானமாகச் சிலர் சொல்வார்கள். இன்னும் அநேகர், பிரசங்கியார் தங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று விரும்புவார்கள். மற்றவர்களுடைய ஜெபத்தைக் காட்டிலும் பிரசங்கியாருடைய ஜெபம் வல்லமையுள்ளதென்றும், பலன் கொடுக்கக்கூடியதென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். மேலே குறிப்பிட்டிருக்கும் மனிதர்களுடைய விசுவாசம் உறுதியானதாகத்தான் இருக்கும். ஆயினும், அவர்களுடைய விசுவாசம் மற்றவர்களுடைய விசுவாசத்தைவிட உறுதியானது என்பதற்கு எவ்வித உத்திரவாதமும் இல்லை. உண்மையில், நாம் வேதத்தைப் பார்க்கும் போது, இவர்களிடமெல்லாம் எங்கே விசுவாசமிருக்கப் போகிறது என்று எண்ணப்படுகிறவர்களிடம் தான் மிகப்பெரிய விசுவாசம் இருந்திருக்கிறது.

உதாரணமாக, இயேசு மூன்று முறை ஒரு குறிப்பிட்டவர்களைப் பார்த்து அவர்களுடைய விசுவாசம் "அற்ப விசுவாசம்" அல்லது, பலவீனமான விசுவாசம் என்று சொன்னார். அவைகளில் இரண்டு முறை அந்த அற்ப விசுவாசமுடையவர்கள் பன்னிரெண்டு சீடர்களாயிருந்தார்கள், (மத்தேயு 8:23 - 27 ; மத் 16 : 5 - 12). மற்றொரு உதாரணம், தண்ணீரின் மீது நடந்த பேதுருவாக இருந்தார் (மத்தேயு 14 : 22 - 36). இது அநேகரை அச்சரியப்படுத்தும், ஏனென்றால், இவர்கள் தான் மிகப்பெரிய விசுவாசத்தை உடையவர்களாய் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் இயேசுவுடன் சென்று, தினமும் அவரிடமிருந்து கற்றுக்கொண்டு, அநேக மாபெரும் அற்புதங்களைக் கண்டார்கள். இருந்தபோதிலும், அவர்களுடைய விசுவாசம் அதற்கேற்றபடி வளரவில்லை.

ஆனால், சிலருடைய விசுவாசத்திற்காக இயேசு அவர்களைப் புகழ்ந்தார். இதற்கு ஓர் உதாரணம், லூக்கா 7: 1 - 10 வசனங்களில் உள்ளது.



நூற்றுக்கு அதிபதி, வியாதிப்பட்டிருந்த தன் வேலைக்காரன் சுகமாக அவன் இயேசுவினிடத்தில் போகவும், இயேசு அவன் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்கவும் தான் பாத்திரன் அல்ல என்று அறிக்கை பண்ணினான். இதைக்கேட்டு இயேசு ஆச்சரியப்பட்டு, தாம் இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிபட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று சொன்னார் (லூக்கா 7:9).

மற்றுமொரு உதாரணம், மாற்கு 5:25-34 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில், வியாதியாயிருந்த ஓர் ஏழை யூதப் பெண் மருத்தவர்களால் குணப்படுத்த முடியாத தன்னுடைய வியாதியை இயேசுவால் சுகமாக்க முடியும் என்று உறுதியாக விசுவாசித்தாள். இயேசு நடந்து செல்லும் போது, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாலே தான் சுகமாகிவிடுவேன் என்று இயேசுவின் வல்லமையில் உறுதியாக விசுவாசம் வைத்தாள். இயேசு, அவளுடைய விசுவாசம் அவளை இரட்சித்து என்று சொல்லிப் பாராட்டினார். அவளுக்கு மிகப்பெரிய விசுவாசம் இருந்ததென்று இயேசு குறிப்பாகச் சொல்லவில்லை என்பது உண்மையாக இருந்தாலும், அவர் சொன்னதில் அது உள்ளடக்கம் என்பதை நாமெல்லாம் ஒத்துக்கொள்வோம் என்று நான் நம்புகிறேன்.

மூன்றாவது உதாரணம் மத்தேயு 15 : 21 - 28 வசனங்களில் இடம்பெற்றிருக்கிறது. இச்சம்பவம் பிசாசு பிடித்திருந்த கானானிய ஸ்திரீ சம்பந்தமானது. அவள் இயேசுவிடம் வந்தாள், முதலில் அவர் அவளைக் கண்டு கொள்ளாமல், உதாசீனம் பண்ணியது போல் தெரிகிறது. ஆயினும், அவள் பொறுமையுடன் காத்திருந்து இயேசுவிடமிருந்து விரும்பிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள். கடைசியில் இயேசு, "ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது" என்று சொன்னார்.

"மாபெரும்" விசுவாசத்தின் இந்த உதாரணங்கள், ஒரு கானானிய ஸ்திரீ, ஒரு ரோம நூற்றுக்கதிபதி, வியாதியிருந்த ஓர் ஏழை யூதஸ்திரீ ஆகியோரை உள்ளடக்கியது. நிச்சயமாக இவர்களெல்லாம் பெரிய விசுவாசத்தைக் கொண்டிருப்பதற்குத் தகுதியானவர்களல்ல.



மேலே கண்ட இந்த இரண்டு சாரரை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் நாம் என்ன பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும்? முதலாவது **வெறுமனே இயேசுவோடு ஐக்கியம் கொள்வது மட்டும் உறுதியான விசுவாசத்திற்கு உத்திரவாதமல்ல.** ஏனென்றால், விசுவாசத்தில் பலவீனமாயிருந்தது, மற்றவர்களை விட இயேசுவினிடத்தில் நெருக்கமாயிருந்த சீடர்கள் தான். நான் நீண்டகாலமாக கிறிஸ்துவனாக இருப்பதால் மட்டும் என் விசுவாசம் உறுதியாக இருக்கிறதென்று நாம் ஒருபோதும் எண்ணிக்கொள்ளக்கூடாது. சபையில் பெரிய விசுவாசத்தை உடைய நபர் புதிய கிறிஸ்தவராக அல்லது நாம் குறைவாக மதிக்கின்ற ஒரு நபராகக் கூட இருக்கலாம்.

இரண்டாவது, **பெரிய விசுவாசம் பெரும் மனத்தாழ்மையை உள்ளடக்கியதாக இருக்கிறது.** நூற்றுக்கதிபதி இயேசுவை அணுகுவதற்குக் கூட தான் பாத்திரனல்ல என்று எண்ணினான். அந்தக் கானானிய ஸ்திரீ தான் இயேசுவின் பார்வையில் ஒரு நாய் என்று அறிக்கை செய்ய முன் வந்தாள். வியாதியாயிருந்த அந்த ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை மட்டும் தொட விரும்பினாள். மாறாக, சீடர்களோ தேவனுடைய ராஜ்யத்தில் யார் பெரியவனாயிருப்பான் என்று அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டார்கள்.

மாபெரும் தேவதாசர்கள் எல்லாம் தாழ்மையானவர்களாகவே இருந்துள்ளனர். உதாரணமாக, யோவான் ஸ்நானனை நினைத்துப் பாருங்கள்; அவரைப் பற்றி இயேசு இவ்விதமாகச் சொன்னார். "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை என்று" (மத்தேயு 11:11). எவ்வளவு உயர்ந்த, உன்னதமான பாராட்டு வார்த்தைகள் ! ஆயினும், பின்பு யோவான் இயேசுவைப் பற்றிச் சொல்லும் போது, அவர் எனக்குப் பின் வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர், அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றார் (யோவான் 1:27). இவைகளெல்லாம் உண்மையாகவே தாழ்மையான வார்த்தைகள். ஆம், மகத்தான ஒருவரிடமிருந்து வந்த தாழ்மையான வார்த்தைகள்.



நாம் கற்றுக்கொள்ளக்கூடிய அடுத்த பாடம், அநேகமாக மிக முக்கியமான பாடம், **பெரிய விசுவாசம் இயேசுவில் முழுமையான நம்பிக்கை வைப்பதாய் இருக்கிறது.** முழுமையான நம்பிக்கை என்பது நம்மைச் சூழ்ந்து நிற்கிற தடைகளைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து அவருக்குக் கீழ்ப்படிவதாகும். சீடர்கள் அடிக்கடி உலகத்தைப் பார்க்கும் குற்றத்தைச் செய்தார்கள். பேதுருவால் இயேசுவை நோக்கிப் பார்த்தபோது தண்ணீரில் நடக்க முடிந்தது. ஆனால் இயேசுவினிடமிருந்து பார்வையை விலக்கி தண்ணீரைப் பார்த்த போது விபரீதம் ஆரம்பித்தது. அங்கே, இயேசுவின் மேல் முழுமையான நம்பிக்கையை இழந்து போனான். தேவனால் நம்முடைய காரியங்களைப் பார்த்துக்கொள்ள முடியும் என்று இயேசு வாக்களித்துள்ளார். நாம் அதை உண்மையாகவே நம்புகிறோமா? நாம் அப்படி நம்பவில்லையெனில் நம்முடைய விசுவாசமும் பலவீனமானது (மத் 6 : 30).

நாம் எதிரான சூழ்நிலைகளைச் சந்திக்கும் போது இயேசுவை நம்ப வேண்டும். நம் எல்லோருக்கும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் அவ்வப்போது வரும். வெல்ல முடியாது என்று நினைக்கின்ற சோதனைகளின் போதுதான் உங்கள் விசுவாசத்தின் உறுதி வெற்றியைத் தரும். அந்த பெரும்பாடுள்ள ஸ்திரீ திரளான கூட்டத்தின் மத்தியிலும் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட ஒரு வழியைக் கண்டுபிடித்தாள். மிகப்பெரிய கூட்டமாக இருந்தபடியால், 'நாமெல்லாம் அவரை நெருங்கவே முடியாது' என்று எத்தனை பேர் அங்கே தங்கள் முயற்சியைக் கைவிட்டிருப்பார்களோ என்று எண்ணுகிறேன்.

அந்தக் கானானியப் பெண் தான் ஒரு யூதப் பெண்ணாக இல்லாதபடியால் இயேசு தன்னைக் கண்டுகொள்ள வாய்ப்பில்லை என்ற நிலை இருந்தபோது கூட, தன் நிலையில் உறுதி காட்டினாள். அவள் இயேசுவின் செயலில் சுலபமாக அதிருப்தியுற்றுத் திரும்பியிருந்திருக்கலாம். ஆனால் அவள் அப்படிச் செய்திருந்தால் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை பெற்றிருக்க மாட்டாள்.



யாரோ ஒருவர் தங்களைப் புண்படுத்தி விட்டார் என்பதற்காக பலர் ஆராதனையில் கலந்துகொள்ளாமல் புறக்கணிப்பதை நான் கேள்விப்படுகிறதுபோல, பார்ப்பது போல நீங்களும் கேட்டிருப்பீர்கள், பார்த்திருப்பீர்கள். ஒருவேளை இப்படிப்பட்டவைகள் சிலருக்கு சிறிய குற்றமாகத் தெரியலாம், மற்றவர்களுக்கு இது பெரிய குற்றமாகப்படுகிறது. இப்படி கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து தங்கள் உறவைத் துண்டித்துக் கொள்கிறவர்கள், மிகப்பெரிய ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள். பிரதானமாக, பரலோகத்தில் நித்திய வீட்டை இழந்து போகிறார்கள். பெரிய விசுவாசத்தை உடையவர்கள் தேவனையும், அவருடைய குடும்பத்தையும் விட்டு எக்காரணத்திற்காகவும் வெளியேற மாட்டார்கள். நம் விசுவாசத்தைப் பதம் பார்க்கும்படியாக மற்றவர்களிடமிருந்து வரக்கூடிய எவ்வித வார்த்தைகளோ அல்லது செயல்களோ, கிறிஸ்துவுக்கு உண்மையாயிருக்க வேண்டுமென்ற நம் நோக்கத்திலிருந்து நாம் விலக ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

உங்கள் விசுவாசம் எப்படிப்பட்டது? நீங்களும் ஒரு பெரிய விசுவாசம் கொண்டவராக இருக்க முடியும். தடைகள் எதுவாக இருந்தாலும் உங்கள் விசுவாசம் வளர்ந்து பெருகுவதாக (IIதெச. 1:3). உங்களுக்காக ஜெபிக்கிறோம் !

எங்களை தொடர்பு கொள்ளுங்கள் :

**கிருபையுள்ள வார்த்தை T.V. நிகழ்ச்சிகள்**

தமிழன் T.V.

ஞாயிற்றுக்கிழமை காலை 6-45 மணி

செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணி

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :